இணைப்பு I

[41 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசிடம் உள்ள தகவலின்படி சென்னைப் பெருநகரில் 1977, 1978, 1979, 1980 ஆண்டுகளில் நடைபெற்றுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

வருடம்	வாகனங்களின் எண்ணிக்கை.	விபத்துக்களின் எண்ணிக்கை.	வாகனங்களின் எண்ணிக்கையோடு விபத்துக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)
1977	73,030	5,176	7.1
1978	80,869	5,022	6.2
1979	84,106	4,728	5.6
1980	95,589	5,163	5.4

மேலே கண்ட புள்ளி விவரங்களின்படி சென்னைப் பெருநகரில் விபத்துக்கள் அரசின் தடுப்பு நடவடிக்கையால் குறைந்துகொண்டு வந்துள்ளது. இருந்தாலும் இன்னும் விபத்துக்களைக் குறைப்பதற்கு அரசு கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:—

(1) கனரக மோட்டார் வண்டிகள் அதிக வேகமாக செல்வதைத் தடுப்பதற்கு இவ்வண்டிகளுக்கு வேகக் கட்டுப்பாட்டை நிர்ணயித்து இவ்வண்டிகளின் ஓட்டுநர்களை எச்சரிக்கும் வகையில் எலக்ட்ரானிக் முறையில் இயங்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்று பொருத்தப்பட வேண்டும் என்று தமிழ் நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் உரிமங்கள் வழங்க நிர்ணயிக்கும் நிபந்தனைகளில் ஒன்றாக விதிக்கப்பட்டுள்ளது.

(2) சாலைகளை அகலப்படுத்துதல்.

(3) நடைவழி சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

(4) இரயில் பாதை கடவுகளுக்கு மேல் கீழ்மட்ட பாலங்கள் அமைத்தல்.

(5) நடைபாதை மற்றும் சைக்கிள் போக்குவரத்து வசதிகள் செய்தல்.

(6) போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்காக தான்இயங்கி மின்விளக்குகள் அமைத்தல்.

1981 பிப்ரவரி 26]

2. போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மோட்டார் வாகனங்களின் இயந்திரங்களின் (Engine) தன்மையினை அவ்வப்போது சோதனை செய்து தக்க நிலையில் உள்ளனவா என்று சோதனை செய்கின்றனர். காவல் துறை அதிகாரிகள் போக்குவரத்து விதிகளை வண்டி ஓட்டிகள் கவனமாகக் கடைப் பிடிக்கிறார்களா இல்லையா என்று உன்னிப்பாகக் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

3. மேலே கண்ட நடவடிக்கைகளால் சென்னைப் பெருநகரில் விபத்துக்கள் மேலும் குறைந்துகொண்டே வருகிறது.

இணைப்பு III

[43 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அவை முன்வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1979-80 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சக்தி ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவின்படி, அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் வாரியமும் கருத்தில் கொள்ளும். மின் வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை பற்றி இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப் பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. மின் சக்தியே, மக்களுக்கு மிகவும் பயனுள்ள சக்தியாகும். பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமானது. சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இது இன்றியமையாதது. இம் மாநிலத்தில் மின்சாரத் தேவை விரைவாகப் பெருகி வரும்போது கூடுதல் மின் உற்பத்தித் திறன் அதற்கு ஏற்பப் பெருகவில்லை. இதனால், பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. 1970-80-ல் 25 சதவிதம் முதல் 75 சதவீதம் வரை மின்வெட்டு விதிக்கப்பட்டுள்ளது.